Chundikuli Branch Library
பொதுசன நூலகம்
23-5-1991
யாழ்ப்பாணம்

# பாதுகாவலன்

PATHUKAVALAN

## கருதினால்கள்

| | | |
|---|---|---|
| ஐரோப்பா | 73 | (45) |
| வடஅமெரிக்கா | 13 | (10) |
| லத். அமெரிக்கா | 22 | (18) |
| ஆபிரிக்கா | 17 | (15) |
| ஆசியா | 13 | (11) |
| அவுஸ்திரேலியா | 03 | (03) |
| மொத்தம் | 141 | (102) |

அடைப்புக் குறிகளில் வாக்குரிமை பெற்ற கருதினால்களின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது.

மலர்: 117 இதழ்: 8 24-05-1991 (மே. 24— யூன். 07) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50

### அடிப்படைவாதக் குழுக்கள் கத்தோலிக்க திருச்சபையில் ஊடுருவ ஆசிய இறையியலாளர்களே காரணமா?

# ஆசிய, இந்திய இறையியலாளர் மீது கருதினால் ரொம்கோ குற்றச்சாட்டு

ஏப்ரல் 5ஆம் திகதி கருதினால்கள் வத்திக்கானில் ஒன்றுகூடி கத்தோலிக்க திருச்சபையைப் பாதிக்கின்ற "அடிப்படைவாதக் குழுக்கள் பரவாதிருக்க மறைபரப்புப்பணி முன்னேற்றப்பட வேண்டும்" என்ற கருத்தை ஆராய்ந்தபோது மறைபரப்புக்குப் பொறுப்பான கருதினால் ஆசிய இந்திய இறையியலாளர்களின் சிந்தனைகள் கத்தோலிக்க விசுவாசிகளிடையே ஏற்படுத்திய குழப்ப நிலையே அதற்கு காரணம் என குற்றம் சாட்டினார்.

அடிப்படைவாதக் குழுக்கள் திருச்சபையில் ஊடுருவுவதற்கு ஆசிய இறையியலாளர்களே காரணம் என திருச்சபையின் மறைபரப்புச் சபையின் உயர் தலைவர் யோசவ் ரொம்கோ கூறியுள்ளார். சென்ற மாதம் 5 ஆம் திகதி வத்திக்கானில் கருதினால்கள் ஒன்றுகூடி "அடிப்படைவாதக் குழுக்கள் பரவாதிருக்க மறைபரப்புப் பணி முன்னேற்றப்பட வேண்டும்" என்று ஆராய்ந்தபோது அங்கு உரையாற்றிய கருதினால் ரொம்கோ ஆசிய இறையியலாளர்களைச் சாடியுள்ளார்.

மதங்களுக்கிடையேயான கலந்துரையாடல், சுதேச கலாச்சாரத்துக்கு ஏற்ப மதத்தை அமைத்தல் போன்றவற்றில் அளவுக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் கத்தோலிக்கர் விசுவாசத்தில் குழப்பம் அடைந்து அடிப்படைவாதக் குழுக்களில் சேர ஆசிய இறையியலாளர்கள் காரணமாயிருந்துள்ளனர் என கருதினால் கூறியுள்ளார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் மதங்களுக்கிடையேயான கலந்துரையாடலை ஊக்குவித்துள்ளது. ஆனால் சில இறையியலாளர்கள் ஏற்க முடியாத, பாதிப்பை உண்டு பண்ணக்கூடிய கருத்துக்களை உருவாக்கியுள்ளனர். இது மறைபரப்புப் பணியை மனித முன்னேற்றத்துக்கும், கலந்துரையாடலுக்கும் தாழ்த்தி விட்டு மறைக்கல்வி, மனந்திருப்புதல், போதனைகளை கைவிடத் தூண்டியுள்ளது என்றும் இதற்கு ஆசிய, இந்திய இறையியலார்களே காரணம் என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

## மறைந்த பிதாவுக்கு புகழுரை

திருச்சி திருமறைப் பணி நிலையத்தில் கிறிஸ்தவ புதுப்பித்தல் இயக்கத்தின் முதலாவது பிராந்திய மகாநாடு

மாவட்டங்களிலிருந்து சுமார் 700 பிரதிநிதிகள் மகாநாட்டுக்குச் சமூகமளித்திருந்தனர்.

தஞ்சாவூர், திருச்சி, கும்பகோண ஆயர்களும் வருகை தந்திருந்தனர்.

## குருமாணவர்களுக்கு பொதுப்பயிற்சித்திட்டம்

இந்தியாவின் மத்தியப் பிரதேச ஆயர்கள் சிறிய குருமட மாணவர்கள் பெரிய குருமடம் செல்லுமுன் அவர்களுக்கு ஓராண்டு பொதுவான பயிற்சியளிக்கத் தீர்மானித்துள்ளனர். சிறிய குருமடத்திலும் அவர்களுக்கு ஒரே கல்வித்திட்டத்தைப் பின்பற்றுவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பேராயர் லெஃவேபர் காலமானார்

1976 முதல் பிற்போக்குக் கொள்கைகளைக் கடைப்பிடித்தமைக்காக திருச்சபையால் தடைசெய்யப்பட்டிருந்த பிரெஞ்சுப் பேராயர் மார்ஷல் லெஃவேபர் மார்ச் 25 இல் காலமானார். அவரது மரணத்தின் போது திருச்சபையால் தெரிவிக்கப்பட்ட அனுதாபச்

இறைவனின் இரக்கத்திற்கு ஒப்படைத்து செபித்தார்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது

## ஆசிய கருதினால்கள்

| | |
|---|---|
| இந்திய | 4—(4) |
| பிலிப்பைன்ஸ் | 2—(2) |

## மறைந்த பிதாவுக்கு புகழுரை

திருச்சி திருமறைப் பணி நிலையத்தில் கிறிஸ்தவ புதுப்பித்தல் இயக்கத்தின் முதலாவது பிராந்திய மகாநாடு நடைபெற்றபோது ஆசாரிய குரு பிதா அமலோற்பவதாஸ் அவர்களது உருவப்படம் திரை நீக்கம் செய்யப்பட்டு அவருக்குப் புகழுரைகள் கூறப்பட்டன. அவர் கிறிஸ்தவ சமூகத்தினரை நாட்டில் வாழும் ஏனைய மக்களோடு இணைப்பதற்குக் கையாண்ட பரந்த நோக்குடைய அணுகு முறையையும், சமூக நீதியில் கரிசனையுடையவராய்த் தாழ்த்தப்பட்ட இனக் கிறிஸ்தவர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்ததையும், அவரது அர்ப்பணத்தையும் தன்னலமற்ற பணியையும் எடுத்துக் கூறி அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்நாடு, பாண்டிச்சேரி, பெங்களூர், கோலார் ஆகிய இடங்களிலுள்ள 14 மறை மாவட்டங்களிலிருந்து சுமார் 700 பிரதிநிதிகள் மகாநாட்டுக்குச் சமூகமளித்திருந்தனர். தஞ்சாவூர், திருச்சி, கும்பகோண ஆயர்களும் வருகை தந்திருந்தனர்.

## குடும்பத்திட்ட ஞானொடுக்கம்

(யூக்கன் செய்தி)

ஐம்பது இயற்கைமுறை குடும்பக்கட்டுப்பாட்டு ஊழியர்கள் டாக்காவிற்குத் தெற்கேயுள்ள பரிசால் என்னுமிடத்தில் தமது மூன்றாவது வருடாந்த ஞானொடுக்கத்தில் கலந்து கொண்டனர். இதில் முஸ்லீம்களும் கலந்து கொண்டனர். வளைகுடாப் போரினால் கிறிஸ்தவர்களுக்கெதிரான உணர்வுகள் நிலவியபோதும் அவர்கள் துணிந்து இதில் பங்கு பற்றினர். தாம் தொழிலும் ஊதியமும் பெற்றது மட்டுமல்லாமல் ஆன்மீக ஒழுக்க வளர்ச்சியும் பெற்றுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். இந்த ஞானெடுக்கத்தின் மூலம் தமது உயிரையும், பிறரது உயிரையும் மதிக்கக் கற்றுக்கொண்டதாகவும் கூறினர்.

கொள்கைகளைக் கடைப் பிடித்தமைக்காக திருச்சபையால் தடைசெய்யப்பட்டிருந்த பிரெஞ்சுப் பேராயர் மார்ஷல் லெஃவேபர் மார்ச் 25 இல் காலமானார். அவரது மரணத்தின் போது திருச்சபையால் தெரிவிக்கப்பட்ட அனுதாபச் செய்தியில் ''பேராயர் ஆபிரிக்காவில் நீண்ட காலம் பிரமாணிக்கமாகச் செய்து வந்த மறைப் பணியை அது மறக்கவில்லை என்றும், திருத்தந்தை அவரது இறப்பின் செய்தி கேட்டு, அவரது ஆன்மாவை ஒப்படைத்து செபித்தார்'' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது

## ஆசிய கருதினால்கள்

| | |
|---|---|
| இந்திய | 4—(4) |
| பிலிப்பைன்ஸ் | 2—(2) |
| சீனா | 1—(1) |
| இந்தோனேசியா | 1—(1) |
| கொரியா | 1—(1) |
| பாகிஸ்தான் | 1—(1) |
| தாய்லாந்து | 1—(1) |
| யப்பான் | 1—(0) |
| லெபனான் | 1—(0) |

## ஜப்பானிய வேதசாட்சிகளின் புனித பண்டங்கள்

300 ஆண்டுகளாக மக்காவ் தீவுகளிலுள்ள புனித சவேரியார் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த 59 ஜப்பானிய வேதசாட்சிகளின் புனித பண்டங்களை ஜப்பானுக்குத் திருப்பியனுப்ப திருச்சபை அதிகாரிகள் ஆலோசித்து வருகிறார்கள். தற்போது போர்த்துக்கேய ஆட்சியிலிருந்து வரும் மக்காவ் 1999இல் சீனாவுக்குக் கையளிக்கப்படுமுன் இக் கையளிப்பு நடக்குமெனத் தெரிகிறது.

ஆயினும் இப்புனித பண்டங்கள் பிறநாட்டு வேதசாட்சிகளின் பண்டங்களுடன் கலந்துள்ளதால் அவற்றை இனங்காண வேண்டியுள்ளது. இதற்கென ஜப்பானின் ஆயர் பேரவை ஒரு குருவானவரையும், எலும்பு நிபுணர் ஒருவரையும் அனுப்பியுள்ளது.

300 ஆண்டுகளுக்குமுன் ஒரு போர்த்துக்கேயக் கப்பலில் மக்காவுக்குக் கொண்டுவரப்பட்ட இப்பண்டங்கள் 1835 வரை புனித சின்னப்பர் பேராலயத்தில் வைக்கப்பட்டிருந்தன. 1835இல் அப்பேராலயம் தீக்கிரையானபோது அதிலிருந்து மீட்கப்பட்ட புனித பண்டங்கள் புனித சவேரியார் ஆலயத்துக்கு மாற்றப்பட்டன.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம் கருத்து

### கூட்டுக் கருத்து

பலரின் கருத்துக்களுக்காகத் திருப்பலி ஒப்புக்கொடுப்பதெனக் கூறி, வரையறையின்றி ஒவ்வொருவரிடமும் காணிக்கை பெற்றுக்கொண்டு காணிக்கைகளையும், கருத்துக்களையும் சேர்த்து ஒரேயொரு திருப்பலியை நிறைவேற்றும் நடைமுறை பற்றி பல மறைவட்ட ஆயர்கள் திட்டவட்டமான விளக்கம் தரும்படி கேட்டுக்கொண்டதால் அண்மையில் இதுபற்றி புதிய விதிமுறைகள் வத்திக்கானால் வெளியிடப்பட்டன.

திருச்சபைச் சட்டம் இல. 948 ஐ மேற்கோள் காட்டி, எத்தனை கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவோ அத்தனை திருப்பலிகள் நிறைவேற்றப்படவேண்டும்; ஒரு குறிப்பிட்ட கருத்துக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்க ஏற்றுக்கொள்ளும் குரு, தாமே அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டும், இல்லையேல் அப்பொறுப்பை இன்னொரு குருவிடம் ஒப்படைக்க வேண்டும்; தனித் திருப்பலிக்கென பணத்தைப் பெறும் குரு, பல கருத்துக்களை ஒன்றாக இணைத்து திருப்பலி ஒப்புக்கொடுப்பாராகில் அவர் கோட்பாட்டை மீறிய குற்றத்துக்குள்ளாவார் என புதிய விதிமுறையின் முதலாவது சரத்து கூறுகிறது.

இரண்டாவது சரத்தின்படி கூட்டுக் கருத்துக்களுக்காக ஒரே திருப்பலியை நிறைவேற்றுவதற்கு சம்மதம் தெரிவித்து காணிக்கை செலுத்துபவர்களிடமிருந்து பணத்தைப் பெறுபவர்கள், முன்கூட்டியே அது நடைபெறும் நேரத்தையும் இடத்தையும் அறிவிக்கவேண்டும். இம்முயற்சி வாரத்தில் இரண்டு முறைக்குமேல் நடைபெறக்கூடாது. இச்செயல் நடைபெறும் இடங்களிலுள்ள ஆயர்கள், இவை திருச்சபைச் சட்டத்துக்கு விதிவிலக்குகள் என்பதை மனதில் கொள்ளவேண்டும் என்று கூறுகிறது.

மூன்றாவது சரத்து கூட்டுக் கருத்து திருப்பலி மூலம் மறைவட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட திருப்பலி காணிக்கைத் தொகையிலும் அதிகமாக சேரும் பணம் ஆயரிடம் சேர்ப்பிக்கப்படவேண்டும் என கூறுகிறது.

நான்காவது சரத்து யாத்திரைத் தலங்களில் திருப்பலி ஒப்பு'கொடுக்க பல காணிக்கைகள் கிடைப்பதால், பரிபால'ர்கள் திருச்சபைச் சட்டத்தையும், புதிய விதிமுறைகளையும் பிரமாணிக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறது.

ஐந்தாவது சரத்தானது, இறந்த ஆன்மாக்கள் தினம் போன்ற சந்தர்ப்பங்களில், அல்லது வேறு முக்கிய வேளைகளில், பல கருத்துக்களுக்காக, அனேக காணிக்கைகள் கிடைக்கும்போது, குரு தாம் ஒரு

# புதிய விதிமுறையின் விளக்கம்

**கூட்டுக் கருத்துக்களுக்காக ஒரே திருப்பலியை நிறைவேற்றுவது தொடர்பாக அண்மையில் குருக்களுக்கான சபை (Congregation for the Clergy) வத்திக்கானில் வெளியிட்ட புதிய விதிமுறை ஒழுங்குகள் பற்றி அதன் செயலர் பேராயர் பேரருள்திரு கில்பேட்டோ அகஸ்ரோனி அவர்கள் அளித்துள்ளவிளக்கம் இங்கே தரப்படுகிறது. புதிய விதிமுறையின்படி தேவையேற்படின் வாரத்தில் இரு தினங்கள் மட்டும் முன் அறிவித்தலின் பின்பு கூட்டுக்கருத்துக்களுக்காகத் திருப்பலி நிறைவேற்றுவது அனுமதிக்கப்படுகின்றது.**

இப்புதிய விதிமுறையானது சகல ஆயர் பேரவைகளின் ஆலோசனைகளுக்கமைய ரோமன் கியூறியாவினால் தயாரிக்கப்பட்டு திருத்தந்தையின் அங்கீகாரத்தையும் பெற்றதாகும். ஆகவே இது திருச்சபைச் சட்டத்தின் விதிமுறை ஆகின்றது.

பல்கருத்து அல்லது கூட்டான கருத்துகளைக் கொண்டவை என வழக்கமாக அழைக்கப்படும் திருப்பலிகள் பற்றி தெளிவுபடுத்தும் அறிவுறுத்தலைத் தருமாறு அநேக ஆயர்கள் பன்முறை வேண்டியதற்கு இதுவிடையிறுக்கின்றது.

இவ்விதிமுறையில் இரு பாகங்களுண்டு. முதற் பாகமாகிய பாகத்தில் ஒழுங்கமைதிகள் தரப்பட்டுள்ளன.

முதன்முதலாக இவ்விதிமுறை பண்டுதொட்டு அர்த்தமுள்ளதெனப் போற்றப்பட்டுவரு ஓர் இடையறாத பாரம்பரியத்தைப்பற்றிக் கூறுகின்றது. இப்பாரம்பரியத்தின்படி விசுவாசிகள் ஒரு விசேட கருத்துக்காக பலி ஒப்புக்கொடுக்கும்படி கேட்டு குருவானவருக்கு ஒரு காணிக்கை கொடுப்பது வழக்கம். இந்நாட்களில் அது பெரும்பாலும் பணமாகவே இருக்கின்றது. திருச்சட்டத்தில் இது உதவி ஊதியம் என அழைக்கப்பட்டாலும் பொதுவாகக் காணிக்கை என்றே வழங்கிவருகின்றது. சட்டத்திலுள்ள இந்த முறையிலிருந்து பிரச்சினைக்குரிய வழக்கம் எந்த விதத்தில் வேறுபடுகிறது என்பதும் முகவுரையில் எடுத்துக் காட்டப்படுகிறது.

ஒருவரின் கருத்துக்காக திருப்பலி நிறைவேற்றும்

துக்கள் திருப்பலியின்போது குறிப்பிடப்படுகின்றனதானே என்று இங்கு வாதிப்பதும் முறையாகாது. ஏனெனில் எத்தனை கருத்துக்கள் உள்ளனவோ அத்தனை பலிகள் நிறைவேற்றப்படவேண்டும் என்ற திருச்சபைச் சட்டத்தை இது எவ்வாறு நிறைவுசெய்ய முடியும்.

இந்தத் தவறின் விசேட தன்மையை விளக்க வெளிப்படையில் பல்கருத்து திருப்பலியை ஒத்த, ஆனால் உண்மையில் அதிலிருந்து பெரிதும் வேறுபட்ட, ஆகவே சட்டபூர்வமான இரு நிகழ்வுக்கூறுகள் விதிமுறையில் குறிப்பிடப்படுகின்றன. இவற்றுள் முதலாவது காலங்காலமாக இருந்துவரும் ஒரு வழக்கமாகும். சில வறிய பிரதேசங்களில் விசுவாசிகள், தங்களுடைய பிரத்தியேக கருத்துகளுக்காக திருப்பலி நிறைவேற்றும் பொருட்டு அல்லது, திருச்சபையின் பொதுவான வழிபாட்டிற்குப் பங்களிக்கும் முகமாகவும், குருவின் தாபரிப்புக்காகவும் பணமாகவோ, பொருளாகவோ சிறு காணிக்கைகளை அளிப்பதுண்டு. திருச்சபைச் சட்டத்துக்கமையவும், தமது சொந்த உணர்வு, குருத்துவ அன்புக்கமையவும் அவர் அவர்களது கருத்துக்களுக்காகவும், தேவைகளுக்காகவும் பலி நிறைவேற்றுவார் என்பதை அவர்கள் நன்கு அறிவர்.

மற்ற நிகழ்வுக்கூறு விசுவாசிகள் தாமாக ஒன்றுசேர்ந்து தமது பொதுவான அல்லது வேறுபட்ட கருத்துகளுக்காக ஒரு பலியோ, பல பலிகளோ ஒப்புக்கொடுக்கத் தீர்மானித்து

குறிப்பிட்ட சில கருத்துக்களை சேர்ப்பது அல்லது தனிப்பட்ட நோக்கங்களுக்காக அதன் பலன்களை அடைய முனைவது. இவையெல்லாம் திருப்பலியின் இயல்புக்கே அந்நியமானது என்று பல தடவைகளில் கூறப்படுகிறது.

சிலுவைப்பலியின் அளவற்ற பேறுபலன்களையும், கிறிஸ்துவின் பலியை திருவருட்சாதனமாக நிறைவேற்றும் பொறுப்பு திருச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டமையும், திருச்சபை தன்னிடத்தே கொண்டிருக்கும் ஆன்மீக செல்வங்களையும் பற்றிய இறையியற் கோட்பாட்டில் உண்டான குழப்பத்தையே இந்த நியாயங்கள் எடுத்துக்காட்டுகின்றன. நற்கருணைப்பலியின் பேறுபலன்கள் பல்வேறு நோக்கங்களுக்கு உரித்தாக்கப்படலாம் என எப்போதும் போதித்து வந்துள்ள கத்தோலிக்க கோட்பாட்டை நாம் மறந்துவிடலாகாது. எல்லாவற்றுக்கும் முன்பாக நற்கருணை வழிபாட்டின் பரிந்துரைப்பின் திருச்சபையே குறிப்பிடுபவர்களுக்கும், பலி நிறைவேற்றும் குருவுக்கும், பின்பு காணிக்கை செலுத்துவோருக்கும் பிறருக்கும் இவை உரித்தாக்கப்படலாம்.

குறிப்பிட்ட கருத்துகளுக்காக பலி ஒப்புக்கொடுககும் பொறுப்பை ஏற்கமறுக்கும் குருக்கள், குருவுக்குக் காணிக்கை செலுத்துவதன் மூலம் ஆண்டவரின் நினைவுப்பலியில் சிறப்பான முறையில் மக்கள் பங்கெடுப்பதைத் தடைசெய்கின்றனர். இது தவிர்க்கப்படவேண்டிய ஒரு ஆன்மிக தீங்கு ஆகும். இதுபற்றியும் விதி

இவை திருச்சபைச் சட்டத்துக்கு விதிவிலக்குகள் என்பதை மனதில் கொள்ளவேண்டும் என்று கூறு கிறது.

மூன்றாவது சரத்து கூட்டுக் கருத்து திருப்பலி மூலம் மறைவட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட திருப்பலி காணிக்கைத் தொகையிலும் அதிகமாக சேரும் பணம் ஆயரிடம் சேர்ப்பிக்கப்படவேண்டும் என கூறுகிறது.

நான்காவது சரத்து யாத்திரைத் தலங்களில் திருப்பலி ஒப்பு 'கொடுக்க பல காணிக்கைகள் கிடைப்ப தால், பரிபாலகர்கள் திருச்சபைச் சட்டத்தையும், புதிய விதிமுறைகளையும் பிரமாணிக்கமாகக் கடைப் பிடிக்க வேண்டும் என்கிறது.

ஐந்தாவது சரத்தானது, இறந்த ஆன்மாக்கள் தினம் போன்ற சந்தர்ப்பங்களில், அல்லது வேறு முக்கிய வேளைகளில், பல கருத்துக்களுக்காக, அனேக காணிக்கைகள் கிடைக்கும்போது, குரு தாம் ஒரு ஆண்டில் அவற்றை நிறைவேற்ற முடியாத சந்தர்ப் பங்களில், இறைமக்களின் பதியான வேண்டுகோ ளைப் புறக்கணித்து, அவர்களை அதிருப்திப்படுத் தாது, அவற்றை ஏற்றுக்கொண்டு பிற குருக்களி டமோ மறைவட்ட ஆயரிடமோ அவற்றை சேர்ப் பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றது.

ஆறாவது சரத்து மறைவட்ட ஆயர் இவற்றை தம் குருக்கள் துறவிகளுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்றும், ஏழாவது சரத்து இறைமக்களுக்கும் இவை பற்றி தெளிவாக அறிவுறுத்தவேண்டும் என்றும் கேட் டுள்ளது.

இம்மாதம் 1 ஆம் திகதி யாழ். ஆயர் தம் குருக் களுக்காக அனுப்பிவைத்துள்ள சுற்றுமடலில் மேற் கூறப்பட்ட ஏழு சரத்துக்களும் குறிப்பிடப்பட்டு அவை உடனே நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

கூட்டுக் கருத்துக்காக திருப்பலி ஒப்புக்கொடுப் பது, நடைமுறையிலுள்ள சட்டத்துக்கு விதிவிலக் காக இருப்பதால் இவ்வழக்கத்தைக் கூடியளவு கட்டுப் படுத்தவும், பரவாது தடுக்கவும் எடுக்கப்படும் முயற்சி யில் நாமும் பங்கு கொள்வோம்.

படி கேட்டு குருவானவருக்கு ஒரு காணிக்கை கொடுப்பது வழக்கம். இந்நாட்களில் அது பெரும்பாலும் பணமாகவே இருக்கின்றது. திருச்சட்டத்தில் இது உதவி ஊதியம் என அழைக்கப்பட்டாலும் பொது வாகக் காணிக்கை என்றே வழங்கிவருகின்றது. சட்டத்தி லுள்ள இந்த முறையிலிருந்து பிரச்சினைக்குரிய வழக்கம் எந்த விதத்தில் வேறுபடுகிறது என்பதும் முகவுரையில் எடுத் துக் காட்டப்படுகிறது.

ஒருவரின் கருத்துக்காக திருப்பலி நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஒரு குரு, நீதியின்படி தாமே அதை நிறைவேற்ற அல்லது மற்றொரு குருவானவரிடத் தில் அதனை ஒப்படைக்கக் கடப்பாடு உடையவராகிறார். காணிக்கையின் அளவு இங்கு ஒரு பொருட்டல்ல.

தவறான வழக்கம் என்ன வென்றால் பலரின் கருத்துக்க ளுக்காகத் திருப்பலி ஒப்புக் கொடுப்பதென வரையறை யின்றி ஒவ்வொருவரிடமிருந் தும் காணிக்கை பெற்றுக் கொண்டு, காணிக்கைகளையும் கருத்துக்களையும் சேர்த்து, கூட்டுக் கருத்துகளுக்காக ஒரே யொரு பலியை ஒப்புக்கொடுப் பதன் மூலம் தனது கடப் பாட்டை நிறைவேற்றியதாக கருதுவதாகும். காணிக்கை செலுத்தியவர்களுடைய கருத்

வோ, பொருளாகவோ சிறு காணிக்கைகளை அளிப்ப துண்டு. திருச்சபைச் சட்டத்துக் கமையவும், தமது சொந்த உணர்வு, குருத்துவ அன்புக் கமையவும் அவர் அவர்களது கருத்துக்களுக்காகவும், தேவை களுக்காகவும் பலி நிறை வேற்றுவார் என்பதை அவர் கள் நன்கு அறிவர்.

மற்ற நிகழ்வுக்கூறு விசுவாசி கள் தாமாக ஒன்றுசேர்ந்து தமது பொதுவான அல்லது வேறுபட்ட கருத்துகளுக்காக ஒரு பலியோ, பல பலிகளோ ஒப்புக்கொடுக்கத் தீர்மானித்து அதற்குரிய பொருளைக் கொடுப்பதாகும். இங்கு பல கருத்துக்கள் சுய விருப்பத்தின் பேரில் ஒன்றுபடுத்தப்பட்டு ஒரே கருத்தாகின்றன. இந்த வழக்கங்களுக்கும் பல்கருத்துத் திருப்பலிக்குமுள்ள அடிப்படை வேறுபாட்டை எவரும் கண்டு கொள்ள முடியும்.

இப்புதிய திருச்சட்டத்துக்கு முரணான வழக்கத்தை ஆதரிப் பவர் கூறும் நியாயங்களும் முகவுரையில் குறிப்பிடப்பட் டுள்ளன. இந்நியாயங்கள் போலியானவை, திருச்சபை யியலை சரியாகப் பிரதிபலிக் காதவை என்று அது கூறுகின் றது. உண்மையில் நற்கருணை வழிபாடு திருச்சபையின் செய லாதலால் அது சமுதாயப்பண் புடையது என்றும், அதைத் தனியார்க்குரியதாக்குவது,

குறிப்பிடுபவர்களுக்கும், பலி நிறைவேற்றும் குருவுக்கும், பின்பு காணிக்கை செலுத்து வோருக்கும் பிறருக்கும் இவை உரித்தாக்கப்படலாம்.

குறிப்பிட்ட கருத்துகளுக் காக பலி ஒப்புக்கொடுக்கும் பொறுப்பை ஏற்கமறுக்கும் குருக்கள், குருவுக்குக் காணிக் கை செலுத்துவதன் மூலம் ஆண்டவரின் நினைவுப்பலியில் சிறப்பான முறையில் மக்கள் பங்கெடுப்பதைத் தடைசெய் கின்றனர். இது தவிர்க்கப்பட வேண்டிய ஒரு ஆன்மிக தீங்கு ஆகும். இதுபற்றியும் விதி முறையில் கூறப்பட்டுள்ளது.

குருக்களின் தாபரிப்பு தொடர்பாக புதிய, நிறை வான ஒழுங்கு முறைகள் உள்ளனவெனக் கற்பனைவா தம் புரியும் சில மக்களும் உள் ளனர்—உண்மையில் இம்முறை கள் சட்ட இசைவு பெற்றவை. குருக்கள் தமது சொந்தத் தேவைகளைப் பூர்த்திசெய்ய பூசைக் காணிக்கைகள் இப் போது அவசியமில்லை என அவர்கள் கூறுகின்றனர். பழைய முறையானது திருப் பணியாளர்களின் மகத்து வத்தை அவமதிக்கின்றது என்று தன்னும் சிலர் கூறுகின் றனர்.

இது வெறும் பொய்த்தோற் றம், உண்மைக்குப் பொருந் தாத கற்பனைவாதம். இன்

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள்பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# களத்தை விட்டகலும் அருட்தந்தை இராயப்பு

அவர் ஒரு உதைபந்தாட்ட வீரர். முன்னே ஓடி விளையாடி பேறுகளைப் பெற்றுப்பெருமை தேடிக்கொள்ளும் முன்னோடி வீரர் அல்ல; பின்னே நின்று தடுத்தாடி கரகோஷங்களைப் பெற்றுக் கொள்ளும் காப்பாட்ட வீரருமல்ல; மாறாக இலைமறைகாயாக நடுவில் நின்று விளையாடி முழுக்குழுவினதும் வெற்றிக்கு இயக்குமையமாகவும், உந்து சக்தியாகவும் திகழ்ந்தவர். 1940 களில் புனித பத்திரிசியார் கல்லூரியின் உதைபந்தாட்டக் குழுவில் விளையாடிய பொழுது அவரிடம் காணப்பட்ட, பெருமை நோக்காது பொறுப்புக்களைச் சுமந்து கொள்ளும் இப்பண்பானது அருள்தந்தை பஸ்தியாம்பிள்ளை இராயப்புவின் வாழ்க்கை பூராவையுமே அலங்கரித்த ஒரு நல்ல இயல்பானது.

எளிமையான ஆனால் விசுவாசத்தில் ஆழமாக வேரூன்றிய ஒரு கத்தோலிக்க குடும்பத்தில், யாழ்ப்பாணம், பாசையூரில் 1929 யூலை 2இல் பிறந்த அருள்திரு இராயப்பு அவர்கள் மிகவிரைவாக, மிகத்திறமையுடன் 'லண்டன் மற்றிகுலேசன்' பரீட்சையில் சித்தியெய்தினார். நூறுவீதம் கத்தோலிக்க சமூகமாயினும் பல தேவைகளைக் கொண்டிருந்த இச்சமூகத்தில் பிறந்த அதிதப் புத்திசாலியான இவரை இவருடைய பெற்றோர்கள் ஒரு வைத்தியராக்க வேண்டும்; பாசையூரிலே ஒரு வைத்திய சாலை திறந்து நடாத்த வேண்டும் என்றெல்லாம் கனவு கண்டனர். ஆனால் அவரோ அச்சமூகத்திற்கே முற்றிலும் புதுமையான ஒரு பணியைத் துணிவுடன் தெரிந்து கொண்டார்; ஒரு புதிய வழியில் இறைவனின் மக்களுக்கு சேவை செய்வதென முடிவு செய்தார். காலஞ்சென்ற அருள்திரு. J. நீக்கிலஸ் (அ. ம. தி.) அவர்கள் இவருடைய விருப்புக்கு நீர் வார்த்தார். விரைவிலேயே இளம் இராயப்பு அமல மரித்தியாகிகள் சபையில் சேர்ந்து மேற்படிப்பிற்காக உரோமைக்கு அனுப்பப்பட்டார். தன்னுடைய இறையியல், மெய்யியல் கற்கைகளை உரோமையிலே முடித்துக் கொண்ட அவர் 1955 யூலை 10 இல் இறைவனின் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

இலங்கைமாதா தேசிய குருமடத்தை 1955 இல் அமதிகள் பொறுப்பெடுத்த பொழுது இளங்குருவான இராயப்புவின் ஆன்மீக அறிவியல் ஒழுக்கத் தகைமைகள் கருத்தில் எடுக்கப்பட்டு, ஆசிரியர் குழாத்துள் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அங்கே அறநெறி, இறையியல், திருச்சபைச்சட்டம், பௌதீகசுத்தம், அறிவியல் ஆகிய கற்கைநெறிகளின் பேராசியராகவும், மெய்யியல் மாணவரின் வழிநடத்துனராகவும், ஞானப்பிரகாசம் தமிழ்க்கழகத்தின் காப்பாளராகவும், விளையாட்டுப்பகுதிப் பொறுப்பாளராகவும் கடமையாற்றினார். இக்காலப்பகுதியிலே ஆசிரியருக்கும், மாணவருக்கும் மிகச் சிறந்ததொரு நண்பனாக இவர் திகழ்ந்தார். சிக்கலான ஒழுக்கவியல் பிரச்சனைகளைத் துல்லியமாக விளக்கும் இவர் திறமையும், உண்மைக்குக் குரல் கொடுக்கும் துணிவும், பலவீனமானவர்கள் ஒதுக்கப்பட்டவர்கள் மட்டில் அவர் கொண்டிருந்த கருணையும் அனைவரும் அறிந்தவை. சுருக்கமாகச் சொல்வதானால் இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களினதும் பல தலைமுறைக் குருக்களின் உருவாக்கத்திலே 'இலை மறைகாயாய்' இருந்து இவர் செயற்பட்டார்.

மீண்டும் உரோமைசென்று புனித தோமஸ் அக்குவாயினஸ் பல்கலைக்கழகத்திலே அறநெறி இறையியலிலே கலாநிதிப் பட்டம் பெற்றபின் மீண்டும் தனது ஆசிரியப் பணிக்குத் திரும்பி வந்தார். 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் வழிகாட்டல், நிறுவனங்களுக்கு வெளியே சென்று இலங்கையின் பல இடங்களிலும், அமெரிக்காவிலும் மேய்ப்புப்பணியில் ஈடுபட அவரைத் தூண்டியது.

அனைத்துலகத் திருச்சபையின் அழைப்பை அவர் தம் உடல் நலக்குறைவையும் பொருட்படுத்தாமல் ஏற்றுக் கொண்டார். பாப்பரசரின் குருக்கள், துறவிகளுக்கான மறைபணி ஒன்றியத்தை நடாத்தும் நற்செய்தி அறிவிப்புப் பேராயம், அவ்வொன்றியத்தின் வெளியீடான 'உலகெங்கும்' (Omnis Terra) என்ற சஞ்சிகையின் ஆங்கிலப் பகுதியைப் பொறுப்பேற்க மறைப்பணி ஆர்வமும், ஆங்கிலம் மற்றும் பிரஞ்சு மொழியில் பாண்டித்தியமும் பெற்ற ஒருவரை வேண்டி நின்றது. இளவயதில் காணப்பட்ட, அதிகாரம் பெருமை நோக்காது பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும் அதே மனநிலையுடன் சர்வதேசத் திருச்சபைக்கு தனது சேவையை வழங்க முன்வந்தார் அருட்தந்தை இராயப்பு அவர்கள். இக்காலத்திலே உரோமையில் தன்னுடன் இணைந்திருந்த உடன் உழைப்பாளிகள், அமதி சகோதரர்கள், அகதிகளாய் சென்றிருந்த இலங்கையர்கள் அனைவரின் இதயங்களிலும் இடம் பிடித்துக் கொண்டார். பெரும்பான்மையான இலங்கையர் அல்லாதவர்கள் இவரை அன்புடன் பீற்றர் (இராயப்பர்) என்றே அழைத்தனர்.

உடல்நலக் குறைவு காரணமாக இவர் செய்துகொண்ட நாடு திரும்பும் முடிவானது, யாழ்ப்பாணத்தில் வளர்நிலையில் இருந்து கொண்டிருந்த புனித சவேரியார் குருத்துவக் கல்லூரிக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. இக்குருத்துவக் கல்லூரியில் அவர் எடுத்துக்கொண்ட அனைத்துப் பொறுப்புக்களுக்கும், தன்னை பூரணமாக அர்ப்பணித்துக் கொண்டார். ஆசிரியருக்கும், மாணவருக்கும் ஒரு பலந்தரும் தூணாக அவர் திகழ்ந்தார். திருச்சபைக்கும் அதன் போதனைக்குமான அவரது பிரமாணிக்கம், தன்னுடைய துறவற வாழ்க்கைக்கு அவர் காட்டிய விசுவாசம், தன்னுடைய பொறுப்புக்கள் மட்டில் அவர் காட்டிய அன்பு என்பன வரலாற்றில் மறக்கமுடியாத ஒரு மனிதனாக அவரை மாற்றிவிட்டன. 06-05-91 அன்று இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்ட அவருக்கு எல்லாம் வல்ல இறைவன் முடிவில்லா வாழ்வை அருள்வாராக!

ஆங்கில மூலம்:
அருள்திரு. S. J. இம்மானுவல்

**தமிழில்:** சந்திரன்

# கூட்டுக்கருத்துக்களுக்காகத் திருப்பலி

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

றைய சமுதாயத்திற்கூட, உலகிற் பெருந்தொகையான குருக்கள் பூசைக் காணிக்கைகளையே தமது வாழ்வுக்கு ஆதாரமாகக் கொண்டுள்ளார்கள் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. திருச்சபையின் பல அப்போஸ்தலிக்க செயற்பாடுகள்கூட முழுமையாகவோ, பகுதியாகவோ பூசைக் காணிக்கை எடுக்கப்படாவிட்டால், தமது விசேட கருத்துக்காக திருப்பலி நிறைவேற்றும்படி கேட்கும் வழக்கத்திற்கெதிராக விசுவாசிகளை மாற்றி விடலாம். விசேட கருத்துக்காக பலி நிறைவேற்றுவதும் எப்போதும் உயிருள்ள விசுவாசத்துக்கு சாட்சியமாயிருக்கின்றது. மேலும் மரித்தோருக்காக வேண்டுதல் என்னும் ஆன்ம நலம்மிக்க கிறிஸ்தவ வழக்கத்திற்கும் இவ்கள் தரப்பட்டுள்ளன. முதலாவதாக காணிக்கை செலுத்துவோரின் வெளிப்படையான சம்மதம் தேவை. தற்போது குறிப்பாக இச்சம்மதம் இருப்பதாகவே பெரும்பாலும் கருதப்படுகிறது. இது சட்டபூர்வமானதல்ல, அத்துடன் அப்பலி நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகியன தெளிவாக பிரசித்தமாக அறிவிக்கப்படவேண்டும். எந்த விதத்திலும் இது நடைவதற்கும் ஏதுவான சூழ்நிலை யாத்திரை தலங்களில் காணப்படுவதால் யாத்திரை தலங்களின் பரிபாலகர்களுக்கு ஒரு விசேட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதில் அவர்கள் பொறுப்புணர்ந்து, மனச்சாட்சியின்படி இதனை அனுசரிக்க வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

இவ்விதிமுறையின் மேய்ப்புப்பணி தொடர்பான விடயத்தைப் பெரிதும் உதவுவதால் கிறிஸ்தவ வாழ்வில் தான தருமத்தின் பெறுமதி உணர்த்தப்படவேண்டும். உலகெங்கும் திருப்பலிகளை நிறைவேற்றும் பொருட்டுக் காணிக்கைகளை அளிப்பதன் மூலம் விசுவாசிகள் திருச்சபையின் பணியில் பயனுள்ள விதமாய்ப் பங்கு பற்றுகின்றார்கள் என்பது விளக்கப்படவேண்டும்.

இந்த விடயம் முழுவதை

# கூட்டுக்கருத்துக்களுக்காகத் திருப்பலி

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

றைய சமுதாயத்திற்கூட, உலகிற் பெருந்தொகையான குருக்கள் பூசைக் காணிக்கைகளையே தமது வாழ்வுக்கு ஆதாரமாகக் கொண்டுள்ளார்கள் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. திருச்சபையின் பல அப்போஸ்தலிக்க செயற்பாடுகள்கூட முழுமையாகவோ, பகுதியாகவோ பூசைக் காணிக்கைகளில் தங்கியுள்ளன. அவமதிப்பைப் தேடுபவரோ, கடுந்தூய்மைவாதிகளோதான் பூசைக் காணிக்கைகளைக் கொண்டு குருக்களின் வாழ்வுக்கும் திருச்சபையின் பணிகளுக்கும் துணைபுரிவது காலத்துக்கொவ்வாதது அல்லது தவறானது என்று சாதிப்பர்.

பல்கருத்துத் திருப்பலிகள், அல்லது கூட்டுக்கருத்துத் திருப்பலிகள் செலுத்தும் வழக்கமானது எத்தனையோ விதங்களில் கிறிஸ்தவ மக்களுக்கு இழைக்கக் கூடிய அளவற்ற கேடுகளை ஆயர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விதிமுறை வன்மையான சொற்களைக் கையாளுகிறது. இத்தகைய திருப்பலிகள் பெருகிக்கொண்டு போனால் அல்லது அவை பரவுவதைத் தடுப்பதற்கு கவனம் எடுக்கப்படாவிட்டால், தமது விசேட கருத்துக்காக திருப்பலி நிறைவேற்றும்படி கேட்கும் வழக்கத்திற்கெதிராக விசுவாசிகளை மாற்றி விடலாம். விசேட கருத்துக்காக பலி நிறைவேற்றுவதும் எப்போதும் உயிருள்ள விசுவாசத்துக்கு சாட்சியமாயிருக்கின்றது. மேலும் மரித்தோருக்காக வேண்டுதல் என்னும் ஆன்ம நலம்மிக்க கிறிஸ்தவ வழக்கத்திற்கும் இவ்வழக்கம் ஊறு செய்யலாம். பெரும்பாலும் திருப்பலிக் கருத்துக்கள் மரித்த விசுவாசிகளின் இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுக்கப்படுபவை. குருக்களின் தாபரிப்புக்கும், திருச்சபையின் வழிபாடு, அறச்செயல் முதலிய பல்வேறு செயற்பாடுகளுக்காகவும் அளிக்கப்படும் பூசைக் காணிக்கைகள் வழியாக நாம் திருச்சபையின் வாழ்வில் பங்கு கொள்கிறோம் என்ற உணர்வு கிறிஸ்தவ மக்களிடையே வளர்ந்து வந்துள்ளது. விவேகமற்ற இவ்வழக்கம் பரவக் கூடுமென்ற கவலை விதிமுறையில் பன்முறை தெரிவிக்கப்பட்டுள்ளது.

தவறானமுறையில் நிறைவேற்றப்படும் இத்திருச்சடங்கினையும் விதிவிலக்காக சில சமயங்களில் முறையானதாக ஆக்குவதற்கு சில நிபந்தனைகள் தரப்பட்டுள்ளன. முதலாவதாக காணிக்கை செலுத்துவோரின் வெளிப்படையான சம்மதம் தேவை. தற்போது குறிப்பாக இச்சம்மதம் இருப்பதாகவே பெரும்பாலும் கருதப்படுகிறது. இது சட்டபூர்வமானதல்ல, அத்துடன் அப்பலி நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகியன தெளிவாக பிரசித்தமாக அறிவிக்கப்படவேண்டும். எந்த விதத்திலும் இது நடைமுறையிலுள்ள சட்டத்திற்கு இது விதிவிலக்கேயாதலால், இவ்வழக்கத்தைக் கூடியளவு கட்டுப்படுத்தவும், பரவாது தடுக்கவும் வேண்டியிருப்பதால் ஒரு குறித்த வழிபாட்டுத்தலத்தில் ஒரு வாரத்தில் இரு தடவைகளுக்குமேல் இத்தகைய பலி இடம் பெறலாகாதென திருத்தந்தை கட்டளை விதித்துள்ளார்.

ஒழுங்கமைதிகளின் இயல்பு காரணமாக இவ்விதமுறையைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்தும் பணி ஆயர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இனி விதிவிலக்காகமட்டும் இருக்கக்கூடிய இப்புதிய வழக்கமானது, முக்கியமாகப் பங்கு மட்டத்தில் ஏற்படுத்தக்கூடிய கெடுதிகளையிட்டே இது காத்திரமான ஒரு வேலையாகக் கொள்ளப்படுகிறது. இவ்விதிமுறையை அசட்டைசெய்வதற்கும் ஏதுவான சூழ்நிலை யாத்திரை தலங்களில் காணப்படுவதால் யாத்திரை தலங்களின் பரிபாலகர்களுக்கு ஒரு விசேட எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதில் அவர்கள் பொறுப்புணர்ந்து, மனச்சாட்சியின்படி இதனை அனுசரிக்க வேண்டுமென கேட்கப்பட்டுள்ளது.

இவ்விதிமுறையின் மேய்ப்புப்பணி தொடர்பான விடயத்திலும் உரிய கவனம் செலுத்தி, இவ்விதிமுறையைப் பிரகடனம் செய்யும் சந்தர்ப்பத்தை உரிய மறையறிவை அளிப்பதற்கு பயன்படுத்துமாறு கேட்கபபட்டுள்ளது. ஏனெனில் இது குறித்து ஏற்கெனவேயுள்ள சில கருத்துக்கள், அறியாமை அல்லது திட்டவட்டமான அறிவின்மை காரணமாக ஒரு போலியான சமய கலாசாரச் சூழலில் மீண்டும் தோன்ற ஏதுவுண்டு.

கடைசிப் பகுதி அத்தகைய மறையறிவுக்கு உரிய சில விடயங்களைச் சுட்டிக் காட்டுகிறது. ஒரு குறிப்பிட்ட கருத்துக்காகத் திருப்பலி நிறைவேற்றும் பொருட்டு விசுவாசிகள் அளிக்கும் காணிக்கையின் உண்மையான அர்த்தத்தை மீண்டும் எடுத்துரைத்து விளக்குதல் வேண்டும். பாவத்திற்குப் பரிகாரம் செய்யப் பெரிதும் உதவுவதால் கிறிஸ்தவ வாழ்வில் தான தருமத்தின் பெறுமதி உணர்த்தப்படவேண்டும். உலகெங்கும் திருப்பலிகளை நிறைவேற்றும் பொருட்டுக் காணிக்கைகளை அளிப்பதன் மூலம் விசுவாசிகள் திருச்சபையின் பணியில் பயனுள்ள விதமாய்ப் பங்கு பற்றுகின்றார்கள் என்பது விளக்கப்படவேண்டும்.

இந்த விடயம் முழுவதையும் பற்றி நன்கு சிந்திப்பதற்கு இரண்டாம் வத்திக்கான் சங்கம் ''குருக்களின் பணியும் வாழ்வும்'' என்னும் தீர்மானத் தொகுப்பில் கூறப்பட்டுள்ள அறிவுரையை நினைவு கூர்வது நன்று.

''தாங்கள் நேர்மையாக வாழத் தேவையானவற்றைப் பெறவும், தத்தம் நிலைக்கேற்பக் கடமைகளை நிறைவேற்றவும், ஆயர்களைப் போலவே குருக்களும் திருச்சபை ஆட்சித்துறை சார்ந்த அலுவல்களை நிறைவேற்றும் பொழுது தாங்கள் பெறக் கூடிய பொருள்களைப் பயன்படுத்தவேண்டும். தேவைக்குப் பின் எஞ்சியவற்றைத் திருச்சபையின் நலனுக்காகவும் அன்புப்பணிகளுக்காகவும் செலவிட அவர்கள் முன் வர வேண்டும்'' பூசைக் காணிக்கைகளும் இந்த வகையில் அடங்கும்.

பாதுகாவலன்
PATHUKAVALAN

# திருமதி லீலா றோசலீனுக்கு கலைக் காவிரி விருது

பிரபல இசைக்கலைஞரான திருமதி லீலா றோசலீனுக்கு இவ்வாண்டு கலைக் காவிரி விருது அளிக்கப்பட்டுள்ளது. திருச்சியில் பெப்ரவரி 16ஆம் திகதி நடைபெற்ற ஒரு விழாவில் திருச்சி ஆயர் லோரன்ஸ் கபிரியேல் அவருக்கு ரூ.1000/– பரிசு அளித்துபொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

திருமதி லீலா சாம்ராஜ் வீணை, ஆர்மோனியம், சிதார் என்னும் இசைக்கருவிகளை வாசிப்பதில் திறமையுள்ளவர். பல பக்திப்பாடல்களுக்கு இசையமைத்தவர். பெயர் பெற்ற இசையமைப்பாளரான மாயூரம் வேதநாயகம் வழி வந்தவர்.

கலைக் காவிரி திருச்சி மறை மாவட்டத்தின் கலாசார நிலையமாகும், 1977ல் நிறுவப்பட்டு பிதா எஸ். எம்.ஜோர்ஜ் தலைமையில் மிகத் துரிதமாக முன்னேற்றமடைந்துள்ளது. ஒலிபரப்புதல், ஒலிப்பதிவு நாடாக்கள், திரைப்படப் பகுதி இசை, நடன, நாடகக் குழுக்கள் என இது பல பகுதிகளைக் கொண்டுள்ளது. இது பல நூல்களைப் பிரசுரித்துள்ளது. கண்ணதாசனின் யேசு காவியம், இளைஞர் வேதாகமம் என்பன, இவற்றுள் முக்கியமானவை.

அதன் முழுநேர பரதநாட்டிய பயிற்சி நெறி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டது

அண்மைக் காலத்தில் கலைக் காவிரி அழைப்புக்கிணங்கி பல ஐரோப்பிய நாடுகளில் கலை நிகழ்ச்சிகளை அளித்தது.

## கிறிஸ்தவர்களையும் பிறமதத்தவர்களையும் கவரும் திருத்தலம்

(யூக்கன் செய்தி)

பிலிப்பைன் நாட்டிலுள்ள மின்டா நாவ் தீவிலிருக்கும் லூர்துநாயகியின் திருப்பதி கத்தோலிக்கரை மட்டுமல்லாது பிறமதத்தவரையும் கவர்ந்துள்ளது. அங்கு வருவோரில் அரைவாசிப்பேர் முஸ்லிம்கள் என்றும் அங்குள்ள சிலைகளை அவர்கள் பொருட்படுத்துவதில்லையென்றும் தலத்தின் பரிபாலகர் கூறுகிறார்.

இத்தலமானது மனிதனின் ஆன்மீக வளர்ச்சிக்கு மட்டுமல்லாது அவனது சமூக வாழ்வுக்கும் உதவுகிறது என்று அவர் கூறுகிறார்.

14 ஹெக்டயர் நிலத்தில் அமைந்துள்ள இத்தலத்தில் இயற்கையான ஓர் கற்குகையில் 5 அடி உயரமான தேவதாயின் சுரூபம் உண்டு. குகைக்குப் பின்னாலுள்ள கற்சுவரில் 17 அடி உயரமான இரு சம்மனசுகள் செதுக்கப்பட்டுள்ளன.

இங்கு ஓ சிறுவர் பூங்காவும், சிறிய விலங்ககமும், பொழுது போக்கு மைதானமும் திறந்த வெளியரங்கும் உண்டு. 1970 பூமி நடுக்கத்தால் சேதமுற்ற ஆலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டது.

## பெண் துறவியரின் புதிய சிந்தனை

இந்தியாவின் பல பாகங்களைச் சேர்ந்த பெண் துறவியரின் குழுவொன்று சென்னையிலுள்ள தியான ஆச்சிரமத்தில் ஒன்று கூடி ''இன்றைய இந்திய பெண் துறவியரின் ஆன்மீகமும் பணியும்'' என்பது பற்றி ஆராய்ந்தது.

இந்தியாவில் பெண்களின் நிலைபற்றியும், அவர்களது சமய – சமூக – பொருளாதாரச் சூழலில் பெண் துறவியர் அவர்களுக்கு செய்யக்கூடிய பணிபற்றியும் ஆராயப்பட்டது.

தனிப்பட்ட வாழ்விலும் துறவற சமூகத்திலும்; திருச்சபையிலும் ஓர் விடுவிக்கும் சக்தி அவசியம் என்பதை உணர்ந்த இக்குழு, இப்பணியை வளர்ப்பதற்கு துணைபுரியக்கூடிய ஒரு ஆன்மீகத்தை உருவாக்குவது பற்றியும் சிந்தித்தது. வருங்காலத் துறவற வாழ்வு எத்தகையதாக இருக்க வேண்டும் என்பது பற்றிய கருத்துக்களும் வெளியிடப்பட்டன.

## சிறையில் பல்சமய வழிபாட்டு நிலையம்

(யூக்கன் செய்தி)

கேரளத்திலுள்ள திருச்சூர் மறைமாவட்டம் ஒரு சிறைக்கூடத்தில் கிறிஸ்தவ, இந்து, முஸ்லீம் வழிபாட்டுத்தொகுதியை அமைக்க உதவியுள்ளது.

திருச்சூர் ஆயர் ஜோசவ் குண்டுகுளம் 1989 இல் அச்சிறைச்சாலையைத் தரிசித்த போது அங்கிருந்த பிரார்த்தனை மண்டபம் பாழடைந்து போயிருந்ததால் அதை மீண்டும் கட்டியெழுப்ப உதவி புரியுமாறு அவரை சிறை அதிகாரி கே. செல்வராஜ் கேட்டுக் கொண்டார்

இதற்கு அரசாங்க உதவி கிடைக்காது என்ற படியால் பங்கு மக்களிடமிருந்து இதற்காக ரூ 120,000 சேகர்க்கப்பட்டது. சிறைக்கைதிகள் ஒரு வாரத்துக்கு மச்சமாமிச உணவை ஒறுத்து 15,000 ரூபா சேகரித்தனர். நன்கொடையாக மேலும் உதவிகள் பெறப்பட்டன.

அத்தொகையைக் கொண்டு ஒரு சிற்றாலயம். ஒரு கோயில், ஒரு பள்ளிவாசல் ஆகியவற்றைக் கொண்ட ஒரு நிலையம் அமைக்கப்பட்டது. சிற்றாலயம் திருச்சூர் ஆயரால் திறந்து வைக்கப்பட்டது.

''வியூர் சிறை ஏனைய சிறைச்சாலைகளைப் போன்றதல்ல. அங்கு கைதிகள் நன்கு நடத்தப்படுவதோடு, அவர்கள் திருந்தி தன்மானத்துடன் வாழவும், மக்களோடு தொடர்பு கொள்ளவும் வசதியளிக்கப்படுகிறது'' என சிறைச்சாலை ஆன்ம குருவான பிதா ஷெப்பேட் கூறியுள்ளார்.

## ஆசிய ஆயர்களின் 2வது கருத்தரங்கு

(யூக்கன் செய்தி)

அண்மையில் ஆசிய ஆயர்களுக்காக நடைபெற்ற தலைமைத்துவக் கருத்தரங்குகளில் 53 ஆசிய ஆயர்கள் பங்குபற்றினர். இக்கருத்தரங்கு பயனுள்ளதெனக் கண்டபடியால் மீண்டும் ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது ஏப்ரலிலும், நவம்பரிலும் ஹொங்கொங்கிலும், டிசம்பரில் சிங்கப்பூரிலும், அடுத்த பெப்ரவரியில் தாய்லாந்திலும், நடைபெறும்.



★ அருட்திரு பியோ அவர்களின் ★

## 104-வது பிறந்ததினத் திருப்பலி

தோற்றம் : 25-5-1887 மறைவு : 23-9-1968

முத்திப்பேறுபெற்ற பட்டம் விரைவில் கிடைப்பதற்காக ஒப்புக்கொடுக்கப்படும் திவ்விய பலிபூசைகளில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

1. புனித மரியன்னை பேராலயம் யாழ்ப்பாணம்
24–5–91 மாலை 5–30 மணி.
2. புதுமைமாதா ஆலயம் குருநகர்
25–5–91 காலை 5–45 மணி.
3. செபமாலைமாதா ஆலயம் கொழும்புத்துறை
25–5–91 காலை 6-30.
4. புனித யாகப்பர் ஆலயம் யாழ்ப்பாணம்

1 ஆம் வருட ஞாபகம்

மேரி றோசா



இறைவனடி சேர்ந்த 10 ஆண்டுகள் நிறைவு

சந்தியாப்பிள்ளை
வஸ்தியாம்பிள்ளை

இதற்கு அரசாங்க உதவி கிடைக்காது என்ற படியால் பங்கு மக்களிடமிருந்து இதற்காக ரூ 120,000 சேகரிக்கப் பட்டது. சிறைக்கைதிகள் ஒரு வாரத்துக்கு மச்சமாமிச உணவை ஒறுத்து 15,000

களுக்காக நடைபெற்ற தலைமைத்துவக் கருத்தரங்குகளில் 53 ஆசிய ஆயர்கள் பங்குபற்றினர். இக்கருத்தரங்கு பயனுள்ளதெனக் கண்டபடியால் மீண்டும் ஒரு கருத்தரங்கு ஏற்

ஹொங்கொங்கிலும், டிசம்பரில் சிங்கப்பூரிலும், அடுத்த பெப்ரவரியில் தாய்லாந்திலும், நடைபெறும்.

## 1 ஆம் வருட ஞாபகம்



**மேரி திரேசா**
**அந்தோனிப்பிள்ளை**

மலர்வு: உதிர்வு:
**1918-05-06 1990-05-23**

'சீவியத்தில்
என்னை நேசித்தவர்களே.
மரணத்திலும் மறவார்கள்.''

இரக்கத்தின் இருப்பிடமாகிய இறைவா உம்மிடம் வந்த மேரி திரேசா அந்தோனிப்பிள்ளையை உம் கருணையினால் நோக்கி நித்திய இளைப்பாற்றியை கொடுத்தருள வேண்டுமென இறைஞ்சுகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக, 23-05-91 வியாழன் காலை 6.00 மணிக்கு சில்லாலை, கதிரைமாதா கோவிலில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும் : கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
கரம்பொன் தெற்கு, ஊர்காவற்றுறை

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இல. QB/1001/58/81

## இறைவனடி சேர்ந்த 10 ஆண்டுகள் நிறைவு

**சந்தியாப்பிள்ளை**
**வஸ்தியாம்பிள்ளை**

தோற்றம் : **1901-03-12**
மறைவு : **1981-05-26**

என் அன்புத் தந்தையே,

இறைவா, உமது நல்லடியானாகிய சந்தியாப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளை மீது இரக்கமாயிருந்து அவருக்கு விண்ணரசில் நித்திய பேரின்ப மகிழ்ச்சியை அருள்வீராக. எங்கள் மீட்பர் கிறிஸ்து வழியாக ஆமென்.

இவரின் ஆன்ம சாந்திக்காக இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தில் 26-05-91 காலை 6-30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
அருமை மக்கள்,
பேரப்பிள்ளைகள்

மாரீசன்கூடல்,
இளவாலை

தோற்றம் : 25-5-1887 மறைவு : 25-9-1966

முத்திப்பேறுபெற்ற பட்டம் விரைவில் கிடைப்பதற்காக ஒப்புக்கொடுக்கப்படும் திவ்விய பலிபூசைகளில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

1. புனித மரியன்னை பேராலயம் யாழ்ப்பாணம்
24-5-91 மாலை 5-30 மணி.
2. புதுமைமாதா ஆலயம் குருநகர்
25-5-91 காலை 5-45 மணி.
3. செபமாலைமாதா ஆலயம் கொழும்புத்துறை
25-5-91 காலை 6-30.
4. புனித யாகப்பர் ஆலயம் யாழ்ப்பாணம்
27-5-91 காலை 5-45 மணி
5. அருள் ஆச்சிரமம் யாழ்ப்பாணம்
27-5-91 மாலை 5-30 மணி.
6. புனித அந்தோனியார் ஆலயம் பாஷையூர்
28-5-91 காலை 6-15மணி;
7. புனித யுவானியார் ஆலயம் சுண்டிக்குளி
29-5-91 காலை 6-00 மணி.
8. புனித யூதாததேயு ஆலயம் அரியாலை
30-5-91 மாலை 5-00 மணி.
9. திருஇருதயநாதர் ஆலயம் (புனித ஆரோக்கியநாதர்)
யாழ்ப்பாணம் 3-6-91 காலை 6-15 மணி.
10. புனித செபஸ்தியார் ஆலயம் யாழ்ப்பாணம்
4-6-91 காலை 6-15 மணி.

நிகழ்ந்த, நிகழ்கின்ற சகல இன்னல்களிலும் இருந்து எம்மைக் காத்தமைக்காக இறைவனுக்கு நன்றிகூறி, தொடர்ந்தும் நடைபெறுகின்ற கஷ்டங்களில் எங்களுக்குப் பாதுகாப்பும், நிம்மதியும் கிடைத்திட வேண்டுவோம்.

அருட்தந்தை பியோ மூலம் எமக்குக் கிடைத்த நன்மைகளைப் பின்வரும் விலாசங்களுக்கு அனுப்பி அவருக்கு விரைவில் முத்திப்பேறுபெற்ற பட்டம் கிடைக்க உதவிபுரியுமாறு அனைவரையும் அன்புடன் கேட்கின்றோம்.

392, பிரதான விதி
யாழ்ப்பாணம்.

நம். 1, சென் யூட்ஸ் அவனியூ,
அரியாலை,

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**